www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

53

1970-ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த உடனேயே இலங்கையை குடியர்சாக்குவது தொடர்பான முயற்சிகள்ளை மேற்கொண்டது.

இதற்கான அரசியல் யாப்பை உருவாக்கும் பொறுப்பு, தெரொஸ்கியவாதியும், சட்டவல்லுனருமான கொல்வின் ஆர்டி. சில்வாவிடம் ஒப்படைக்கப்பட்டது. செஞ்சட்டை அணிந்து சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட மேடைகளில் நின்று முதலாளித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் நார் நாராகக் கிழித்துப்போடும் ஒரு மனிதரிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்ததையிட்டு, சிங்களக் கனவான்களும் தமிழ் கனவான்களும் அதிருப்தி கொண்டிருந்தனர். வேறு சிலர் அரசியல் யாப்பினூடாக சோசலிசம் வரப்போவதாகவும் கனவு கண்டனர்.

## 'தமிழர்களையும் - தமிழீழ தேசத்தையும் இரண்டாவது தடவை அடிமையாக்கிய தமிழரசுக்கட்சி'

ஆனால் கொல்வின் ஆர்.டி. சில்வாவோ மந்திரிப் பதவி கொடுத்து தனக்கு அரசியல் மோட்சம் வழங்கிய திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாருக்கு விசுவாசமான முறையில், அவரும் அவரது கட்சியினரும் விரும்பிய படியான அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கும்.. முயற்சியில் ஈடுபட்டார்.

1970-ம் ஆண்டு ஜூன் மாதம் 19-ம் திகதி இதற்கான ஒரு கூட்டம் கொழும்பு நவரங்ககலா மண்டபத்தில் கூட்டப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சிச்சபை உறுப்பினர்கள் உட்பட 1700 பேர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா, 'இக் கூட்டம் மக்கள் பிரதிநிதிகள் சபைக் கூட்டம் (பாராளுமன்றம்) அல்ல. மக்களின் பிரதிநிதிகளின் கூட்டம்' என்று கூறியதோடு, இந்தக் கூட்டம் இலங்கை மக்களுக்கான அரசியல் அமைப்பை உருவாக்கும் என்றும் கூறினார்.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை முதலில் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வது பற்றி அவர்கள் அக்கறை கொள்ளவில்லை. சிவப்புச் சட்டைக்காரரான கொல்வின் ஆர்டி. சில்வாவிடம் அரசியல் அமைப்புச் சட்டத்தை தயாரிக்கும் பொறுப்பை ஒப்படைத்திருந்ததே அதற்குக் காரணமாகும். ஆனால் இலங்கையின் பாராளுமன்ற அரசியலை தீர்மானிக்கக் கூடிய இந்த முக்கியமான கூட்டத்தொடரில் தாங்கள் பங்கு பற்றாது விட்டால் தங்களது பாராளுமன்றப் பதவிக்கு ஆபத்து வந்துவிடும் என்று ஏற்பட்ட பயத்தின் காரணமாக அடுத்து வந்த கூட்டங்களில் பங்கெடுத்தார்கள்.

உண்மையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி 1970-ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கையை முழுமையாக பிரித்தானியர் ஆட்சியிலிருந்து துண்டித்து, தன்னாட்சியும் இறைமையும் உள்ள குடியரசாக ஆக்குவதற்கு ஆணை தருமாறு சிங்கள மக்களைக் கோரியிருந்தது. அதற்கு 24 இலட்சத்து 15 ஆயிரத்து 302 பேர் வாக்களித்திருந்தனர். 157 பாராளுமன்றத் தொகுதிகளில் 116 தொகுதிகளில் அந்தக் கட்சியும் அதன் கூட்டணிகளும் வெற்றிபெற்றிருந்தன.

தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் காங்கிரஸ் கட்சிக்குமே வாக்களித்திருந்தனர். சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களித்த தமிழர்கள் (தென் இலங்கை வாசிகள்) மிகக் குறைவே. அதாவது தமிழ் மக்கள் இலங்கையைக் குடியரசாக்கும் அதிகாரத்தை சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசுக்கு வழங்கவில்லை.

சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆணையின் படி சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசு பிரித்தானியர்களால் உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பை தூக்கி எறியும் போது ஏற்கனவே - கோல்புறூக் ஆணைக்குழுவின் அரசியல் யாப்பின்படி தமிழீழத்தை தமிழ் மக்களின் சம்மதமின்றி சிறீலங்காவுடன் இணைத்த இணைப்பு செயலற்றுப்போய்விடுகின்றது.

அதாவது சிறீலங்கா தனக்குத் தானே உருவாக்கிக்கொண்ட ஒரு அரசியல் யாப்பின் மூலம் தன்னைக் குடியரசாகப் பிரகடனப்படுத்திக் கொள்ளும்போது, தமிழீழ நாடும், அரசும், மக்களும் சட்டரீதியாக தமக்கிருந்த அடக்கு முறைகளிலிருந்து விடுபட்டு தனிநாடாகவும் தனி அரசாகவும் தனி இறைமையுள்ள மக்களாகவும் ஆகிவிடுகின்றனர்.

ஆனால் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள், தங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் தக்க வைத்துக்கொள்வதற்காக தன்னுடைய நாட்டின் அரசியல் அமைப்பை உருவாக்குவதற்காக சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசு கூட்டிய அரசியலமைப்புச் சபைக் கூட்டத்தில் 'பங்கு பற்றியதன் மூலம்' மீண்டும் தமிழீழ நாட்டையும் அரசையும் மக்களையும் சிறீலங்கா அரசிடம் அடிமைப்படுத்தி வைக்கும் ஒரு மிகப் பெரிய துரோகத்தைச் செய்தனர்.

1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் திகதி நடைபெற்ற சிறீலங்காவின் அரசியலமைப்பு ஆக்க சபைக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் பங்குபற்றி உரையாற்றிய சிகதிரவேற்பிள்ளை '(சிறீலங்காவை குடியரசாக்க) மக்களுடைய அதிகாரம் உண்டெனக் கூறுகின்றீர்கள். மக்களுடைய அரசுரிமையின் அடிப்படையில் இருந்து இயங்குவதாகக் கூறுகின்றீர்கள்.......... தமிழ் மக்களைப் பொறுத்தவரை இத்தகைய நடவடிக்கைக்கு எந்தப் பிரதிநிதிக்கும் தமிழ் மக்கள் அதிகாரம் கொடுக்கவில்லை. உங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் எந்தப் பிரதிநிதியும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை. உங்களுடைய தமிழ் வேட்பாளர்கள் அத்தனை பேரும் தோல்வியுற்றனர். (பாகிஸ்தான் ஸ்தாபகர்) முகமதலி ஜின்னாவைப்போல, நாமும் எமது தமிழ் இனமும் தமக்கென தமது இனத்தின் சுய நிர்ணய உரிமையையும் அரசுரிமையையும் நிலை நாட்ட வேறு ஒரு அரசியல் நிர்ணய்சபையை நிறுவி நடவடிக்கை எடுத்திருக்கலாம் அல்லவா? நீங்கள் உருவாக்கும் புதிய அரசியல் அமைப்பின் மூலம் தமிழ் இனத்தை உங்களோடு ஒற்றுமையாகச் சேர்த்து வைத்திருக்க அவர்களை உங்களோடு சரிசமமான சுதந்திர இனமாக வைத்திருக்க வழிசெய்ய வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு மறுநாள் 1970 ஜூலை 21-ல் அந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் உரையாற்றிய க.பொ.இரத்தினம்,

'இந்த நேரத்தில் இந்தக் கூட்டத்தில் தமிழ் மக்களிடமிருந்து நாங்கள் இணைப்பாட்சி பெறுவதற்கு, தமிழரசு பெறுவதற்குப் பெற்றுக்கொண்ட அதிகாரத்தை நீங்கள் மதிக்கவேண்டும். நீங்கள் சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட அதிகாரத்தை நாங்கள் மதிப்பது போல, நாங்கள் தமிழ் மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட அதிகாரத்தை நீங்கள் மதிப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை. எனவே சிங்கள மக்களின் தலைவர்களும், தமிழ் மக்களின் தலைவர்களும் மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட அதிகாரத்துக்குப் பங்கம் உண்டாக்காமலும் ஓரினத்தை ஓரினம் அடக்கி ஆளாமலும், அரசியல் யாப்பு ஆக்கப்படும் என்ற நம்பிக்கையில் தான் நாங்கள் உங்களுடன் ஒத்துழைக்க முன்வந்திருக்கின்றோம் என்று கூறினார். அதாவது தங்களது வர்க்க நலன்களையும் அதை தக்க வைத்துக்கொள்ளும் கவசமாக இருக்கும் பாராளுமன்றப் பதவிகளையும், காப்பாற்றிக் கொள்வதற்காக தமிழரசுக்கட்சி தங்களுக்கு வாக்களித்த தமிழர்கள் தலையில் மிளகாய் அரைத்தது.

**- நக்கீரன்**

---

# அறிவியல் கணித மேதைகள்

**குறிப்பு:**
'அறிவியல் கணித மேதைகள்' என்ற இந்த தொகுப்பு பல கணித அறிஞர்களைப் பற்றியும் அவர்கள் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியதாகும். அறிஞர்கள் எங்கும் தோன்றலாம். இங்குதான் தோன்ற வேண்டும் என்ற நியதி இல்லை. அவர்கள் கூறுகின்ற எந்த ஒரு கருத்தும் அறிவியல் நோக்கில் ஆராயப்பட்டு உலகம் முழுமைக்கும் பொதுமைப் படுத்தப்படுகிறது. இனி அம்மேதைகளைப் பற்றிக்காண்போம்.

## ஆர்க்கிமிடிஸ்

'மக்களாய்ப் பிறந்தால் இறப்பது உறுதி. அப்படியிருக்கும் பொழுது தாய்த்திரு நாட்டைத் தகர்க்க வரும் மிலேச்சரை மாய்த்திட விரும்பாமல் வாழ்வது ஒரு வாழ்வா?' என எண்ணி பகைவரிடமிருந்து தன் தாய்நாடு காப்பாற்றப்பட வேண்டும் என்ற துணிவோடு எதிரிகளைப் புறமுதுகிட்டோடச் செய்யும் கருவிகளைச் செய்தவர். 'எனக்கு நிற்க ஓர் இடம் தாருங்கள், நான் இப்பூமியை தகர்த்திக் காட்டுகிறேன்' என உலகிற்குச் சவால் விடுத்தவர் ஆர்க்கிமிடிஸ்.

ஆர்க்கிமிடிஸ் கி.மு. 287 ஆம் ஆண்டு இத்தாலிக்குத் தெற்கே சிசிலித்தீவில் சைரக்யூஸ் நகரில் கிரேக்க வானநூல் மேதையான சைரக்யூஸ் ∴பைடியாஸ் என்பவருக்கு மகனாகப் பிறந்தார். கிரேக்க மேதையும், கணித வல்லுநரான யூக்லிட் என்பவருடைய மாணவரான அவர் கணிதத்தில் ஏற்பட்ட தீராத தாகத்தால் சினான் என்ற பேரறிஞரிடம் கணிதவியலை நன்கு கற்றறிந்தார்.

இரண்டாம் ஹைரோனிற்குப் பொற்கொல்லனால் செய்யப்பட்ட பொன்முடியானது சுத்த தங்கத்தால் செய்ததுதானா? என்ற சந்தேகத்திற்கு விடை காண முயன்றார்.

'ஒரு செயலை சிந்தித்து தேர்ந்தெடுங்கள். தேர்ந்தெடுத்து பிறகு அதிலேயே கண்ணும் கருத்துமாக ஈடுபடுங்கள். நாடி, நரம்புகள், மூளை போன்றவற்றில் கலக்க விடுங்கள். எடுத்த செயலில் நிலைத்து நின்று உற்சாகமான உழைப்பால் போராடுங்கள். வெற்றி நிச்சயம் உண்டு'

ஒருநாள் குளித்துக்கொண்டிருந்த பொழுது 'நான் கண்டுபிடித்துவிட்டேன்! நான் கண்டுபிடித்து விட்டேன்' என எழுந்து தெருவிலே கூவிக்கொண்டே அரண்மனை நோக்கி ஓடினார். குளித்துக்கொண்டிருந்த உடம்போடு ஓடுவதைப் பார்த்த மக்கள் பைத்தியக்காரரெனப் பேசினார்கள். அரசரிடம் சென்று பொற்கொல்லன் செய்த பொன்முடி சுத்த பொன்னால் செய்ததுதானா? எனச் சோதித்தார். பொன்முடி சுத்த பொன்னால் செய்யவில்லை என நிருபித்துக்காட்டினார். அவர் செய்த அந்த சோதனையே மிதத்தல் விதிகளுக்கு அடிப்படையாக அமைந்தது.

'ஒரு திரவத்தில் மூழ்கி இருக்கும் ஒரு பொருளின் எடைக் குறைவு அதனால் வெளியேற்றப்படும் திரவத்தின் எடைக்குச் சமமாகும்' என்ற மிதத்தல் விதியைப் பயன்படுத்தி அரசரின் சந்தேகத்தைத் தெளிவுபடுத்தி பொற்கொல்லன் சுத்த பொன்னால் பொன்முடி செய்யவில்லையென நிருபித்தார்.

மேலிருந்து கீழே விழுந்த பொருளைக் கொண்டு புவியீர்ப்பு விசையை 'நியூட்டன்' கண்டுபிடித்ததைப்போல, கிணற்றிலிருந்து நீரை எப்படி மேலே சுலபமான முறையில் கொண்டுவந்து ஊற்றுவது எனச் சிந்தித்து ஆர்க்கிமிடிஸ் நெம்புகோல் தத்துவத்தை வெளியிட்டார்.

அறிவியலில் மட்டுமல்லாது கணிதத்திலும் அதிக ஈடுபாடு கொண்டவராக ஆர்க்கிமிடிஸ் காணப்பட்டார். வட்டத்தின் பரப்பு $\pi r^2$ என்பதில் $\pi$ன் மதிப்பு 3.14159265 ஆனால் ஆர்க்கிமிடிஸ் $\pi$ன் மதிப்பானது 3.1408 க்கும் 3.1429 க்கும் இடையில் இருக்கும் என வரையறுத்தார். அவர் கண்டறிந்தவற்றில் முக்கியமானது இன்றிருக்கும் ராடர் கருவிகள். அவைகள் யாவும் ஆர்க்கிமிடிஸ் கண்டுபிடித்த சுருள் வட்ட தத்துவத்தால் தான் இயங்குகின்றன.

கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கிய ஆர்க்கிமிடிஸை சைரக்யூஸ் மன்னர் பாராட்டி பல்வேறு உதவிகளைச் செய்து உதவினார்.

மன்னரின் வேண்டுகோளுக்கிணங்க நெம்புகோல் தத்துவத்தைப் பயன்படுத்தி எறிகுண்டுகள் வீசும் கருவியைக் கண்டுபிடித்தார். போர்க்கருவியைச் செய்து கொடுத்த அதே நேரத்தில் கி.மு. 215 ஆம் ஆண்டு ரோமானியப் படைகளுக்கும், சைரக்யூஸ் நகருக்கும் சண்டை மூண்டது. இச்சண்டையில் ஆர்க்கிமிடிஸ் கண்டுபிடித்த வெடிகுண்டு, எந்திரங்கள், எறிபடைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டு ரோமானியப் படை தோற்கடிக்கப்பட்டது. வெற்றி பெற்ற மக்கள் ஆர்க்கிமிடிஸைப் பாராட்டிப் பெருமைப் படுத்தினார்கள்.

மனித குலத்திற்கு தாம் ஆற்றவேண்டிய கடமை என்ன என்பதை உணர்ந்து வெளிஉலகில் என்ன நடக்கின்றது என்பதை தெரிந்து கொள்ளாமல் மீண்டும் முழு நேர ஆராய்ச்சியில் ஈடுபட்டார் ஆர்க்கிமிடிஸ்.

இந்தக் குறுகிய கால கட்டத்தில் தோற்கடிக்கப்பட்ட ரோமானியப் படை தளபதி மார்சேல்ஸ் தலைமையில் சைரக்யூஸ் நகரை முற்றுகையிட்டது. ஆர்க்கிமிடிஸின் அறிவுத்திறன் மீது மிகுந்த மரியாதை கொண்ட மார்சேல்ஸ் அவரது உயிருக்கு ஆபத்தோ, அவர் வீட்டை யாரும் நாசப்படுத்தவோ கூடாது என கட்டளையிட்டான். ஆர்க்கிமிடிஸைப் பயன்படுத்திப் போர்க்கருவிகளைப் பெருக்கலாம் என மார்சேல்ஸ் திட்டமிட்டான்.

போர் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுது ஒரு போர்வீரன் ஆர்க்கிமிடிஸ் ஆராய்ச்சிக் கூடத்திற்குள் நுழைந்து, கணிதஆய்வில் மூழ்கியிருந்த அவரை தன் பளபளக்கும் வாளால் வெட்டி வீழ்த்திவிட்டான்.

கணித இயலின் தந்தை என போற்றப்பட்டவர் பேடி ஒருவனால் கொல்லப்பட்டார் என அறிந்தபொழுது அறிவியல் உலகம் ஆறாத துயரோடு அழுதது.

மாபெரும் அறிவியல் மேதை இரு துண்டங்களாக வெட்டி வீழ்த்தப்பட்டார் என அறிந்த ரோம் தளபதி தவறு செய்துவிட்டோமே! எனக் கதறினான். அவரது புண்ணிய உடலை மலர் மேடையில் வைத்து போர் வீரர்கள் அஞ்சலி செலுத்த மரியாதை செலுத்தினான். அந்த நிகழ்ச்சியைப் பார்த்து, பைத்தியக்காரன் எனப்பேசி வந்த புல்லர்களும் கண்ணீர் வடித்துக் கதறி அழுதனர்.

**- எஸ். அன்பழகன்**